S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1978
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE செவ்வாய் ஜனவரி 20 * 2026 * மலர் -1 * இதழ்-231* VOL-1 * ISSUE-231 விலை ரூ.3 * பக்கம் -4

## மாமல்லபுரம் அருகே

# 1,475 ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய நீர்த்தேக்கம்!

## ✸ ரூ.342 கோடி செலவில் உருவாக்கப்படுகிறது; ✸ முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார் !!

சென்னை, ஜன.20–

மாமல்லபுரம் அருகே 1475 ஏக்கர் பரப்பளவில் மிகப் பெரிய நீர்த்தேக்கம் கட்டப்பட உள்ளது. இதற்கு மாமல்லன் நீர்த்தேக்கம் என்று பெயர் வைக்கப்படும். இதற்காக ரூ.342கோடிசெலவிடப்படும்.இந்தநீர்த்தேக்கத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நடந்தது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டார்.

சென்னையின் மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கிறது. அதன் பரப்பளவும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. அதனால் குடிநீர் தேவையும் அதிகரிக்கிறது. நீண்ட காலமாக சென்னை மக்களுக்கு பூண்டி, புழல், சோழவரம், செம்பரம்பாக்கம் ஆகிய 4 ஏரிகளில் இருந்து தண்ணீர் பெறப்பட்டது. சில வருடங்களுக்கு முன்னர் திருவள்ளூர் மாவட்டத்தில் தேர்வாய்க் கண்டிகை என்ற இடத்தில் 5–ஆவது நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டது. இது ஒருபுறம் இருக்க வீராணம் ஏரியில் இருந்தும் குடிநீர் பெறப்படுகிறது. மேலும் மீஞ்சூர், நெம்மேலி ஆகிய இடங்களில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்களும் உள்ளன. இந்த நிலையில் சென்னைக்கு குடிநீர் வழங்க 6–ஆவது நீர்த்தேக்கம் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது. இதற்கு மாமல்லன் நீர்த்தேக்கம் என்று பெயர். இதற்காக ரூ.342.60 கோடி ஒதுக்கப்படுகிறது. இதை அமைப்பதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று அடிக்கல் நாட்டினார்.

இந்த ஏரியானது செங்கல்பட்டு மாவட்டத்தில் கிழக்கு கடற்கரை சாலை – ராஜீவ் காந்தி சாலை ஆகியவற்றுக்கு இடையே அமைய உள்ளது. அதாவது திருக்கழுக்குன்றம் மற்றும் திருப்போரூர் தாலுகாவுக்கு உட்பட்ட 11 வருவாய் கிராமங்களில் இந்த நீர்த்தேக்கம் அமையும். இதன் பரப்பளவு 1475 ஏக்கர் ஆகும். பருவ மழை காலத்தில் ஏராளமான அளவில் வெள்ளம் கடலில் கலக்கின்றது. அதை தேக்கி வைத்து சென்னையின் குடிநீருக்கு பயன்படுத்த திட்டம் வகுக்கப்பட்டது. அதன்படி இந்த ஏரி அமைக்கப்படுகிறது.

இதன் கொள்ளளவு 2.25 டி.எம்.சி. அடியாக இருக்கும். இதன் மூலம் ஆண்டுதோறும் 17 கோடி லிட்டர் குடிநீரை பெற முடியும். சென்னை மக்களுக்கு மட்டுமல்லாது பையனூர், தண்டலம், திருப்போரூர், விருவிடந்தை, கடம்பாடி ஆகிய பகுதி மக்களுக்கும் இங்கிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்படும்.




செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் நீர்வளத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செங்கல்பட்டு மாவட்டத்தின் திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டங்களில் பழைய மாமல்லபுரம் சாலைக்கும் கிழக்கு கடற்கரை சாலைக்கும் இடையில் கோவளம் உபவடிநிலப் பகுதியில் 5161 ஏக்கர் பரப்பளவில் 342 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர் நீர்த்தேக்கத்திற்கு “மாமல்லன்” என்று பெயர் சூட்டி, நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.



சிவகாசியில் இருந்து வெம்பக்கோட்டை செல்லும் சாலை கொங்கலாபுரத்தில் வெளிவட்ட சுற்றுச்சாலை அமைக்க வேண்டி நடத்தப்பட்ட பூமிபூஜையில் அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று அடிக்கல் நாட்டினார். அருகில் அரசன் அசோகன் எம்.எல்.ஏ., மேயர் சங்கீதா இன்பம், துணை மேயர் விக்னேஷ் பிரியா, மாமன்ற உறுப்பினர்கள், மாநகர தி.மு.க. செயலாளர் உதயசூரியன் உள்பட தி.மு.க., காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



தொடர் விடுமுறையையொட்டி வால்பாறையில் குவிந்த சுற்றுலா பயணிகளால் போக்குவரத்து பாதித்தது.



தொடர்விடுமுறை நேற்றுடன் முடிந்ததை தொடர்ந்து சொந்த ஊர்களுக்கு பொங்கலுக்கு சென்ற பொதுமக்கள் திரும்பினார்கள். இதனால் கிருஷ்ணகிரி சுங்கச்சாவடியில் ஸ்தம்பித்து நின்ற வாகனங்களால் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

## மணப்பாறை அருகே விபத்து:

# டயர் வெடித்து கார் கவிழ்ந்து தொழிலதிபர் மனைவி சாவு!

## தேனி மாவட்டத்தைச் சேர்ந்தவர்!!

மணப்பாறை, ஜன.20–

மணப்பாறை அருகே காரின் டயர் வெடித்து விபத்துக்குள்ளானதில் தொழிலதிபர் மனைவி உயிரிழந்தார் நான்கு பேர் படுகாயம் அடைந்தனர்.

தேனி மாவட்டத்தைச் சேர்ந்த சண்முகசுந்தரம் (52) இவர் திருச்சியில் பூண்டு வியாபார மண்டி கடை வைத்துள்ளார். இந்த நிலையில் தனது சொந்த ஊரான தேனி மாவட்டம் வடுகப்பட்டிக்கு பொங்கல் பண்டிகைக்கு சென்று விட்டு மீண்டும் நேற்று இரவு திருச்சிக்கு அவரது காரில் அவரது மனைவி வீரலட்சுமி (வயது 48),முருகேசன் (வயது 52),பாரத் (வயது 26) முனியசாமி (வயது 42) ஆகியோர் திருச்சிக்கு வந்து கொண்டிருந்தனர்.

காரை முனியசாமி ஓட்டி வந்த நிலையில் திருச்சி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை வையம்பட்டி அருகே திடீரென காரின் முன் பக்க டயர் வெடித்ததில் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த கார் சாலை நடுவே இருந்த தடுப்பு கட்டையில் மோதி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் காரில் பயணம் செய்த வீரலட்சுமி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியானார்.

மற்ற நான்கு பேரும் பலத்த காயம் அடைந்தனர்.உடனடியாக அருகில் இருந்தவர்கள் இவர்களை மீட்டு மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

இச்சம்பவம் பற்றிய தகவல் அறிந்த வையம்பட்டி காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விபத்தில் பலியான வீரலட்சுமியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மணப்பாறை அரசு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். மேலும் இச்சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



சிவகங்கை மாவட்டம், கல்லல் அருகே உள்ள நெற்புகப்பட்டியில் நடைபெற்ற மாட்டு வண்டி எல்கை பந்தயத்தில் பங்கேற்ற மாடுகள் எல்லையை நோக்கி விரைந்து செல்லும் காட்சி.



தைஅமாவாசையை முன்னிட்டு தாராபுரம் அமராவதி ஆற்றங்கரையில் உள்ள ஈஸ்வரன் கோவில் படித்துறையில் முன்னோர்களுக்கு பொதுமக்கள் தர்ப்பணம் கொடுத்தனர்.

## கோபி அருகே பரபரப்பு:

# துப்பாக்கியால் 3 முறை சுட்ட அ.தி.மு.க. நிர்வாகி!

கோபி,ஜன.20–

கோபி அருகே அதிமுக நிர்வாகி 3 முறை துப்பாக்கியால் சுட்டு மிரட்டல் விடுத்ததுடன், கார் கண்ணாடியை உடைத்து ரகளையிலும் ஈடுபட்டார். இதுபற்றி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஈரோடு மாவட்டம் கோபியை அடுத்த கோட்டுப்புள்ளாம் பாளையம் ஆண்டவர்மலை பகுதியை சேர்ந்தவர் கோபிநாத் (43), விவசாயி. அதிமுக ஈரோடு மேற்கு மாவட்ட மாணவரணி இணைச்செயலாளராகவும் உள்ளார். இவரது மனைவி பிருந்தா.மகள், ஹாசினி. கோபிநாத் நேற்று இரவு தனது மனைவி பிருந்தாவிடம் குடிபோதையில் தகராறு செய்தார். அதனை பொறுக்க முடியாத பிருந்தா தனது தந்தை மற்றும் தம்பியான பவானிசாகர் எரங்காட்டூரை சேர்ந்த தினேஷ் குமாருக்கு செல்போனில் தகவல் கூறினார். உடனடியாக அவர்கள் ஆண்டவர் மலைக்கு விரைந்து வந்தனர். மது போதையில் தகராறு செய்த கோபிநாத்தை கண்டித்தனர். அப்போது கோபிநாத்தை அவரது மைத்துனர் தினேஷ்குமார் தாக்கியதாக கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைந்த கோபிநாத், தனது உரிமம் பெற்ற துப்பாக்கியினை எடுத்து வந்து வானத்தை நோக்கி 3 முறை சுட்டு எச்சரிக்கை விடுத்தார். மேலும் ஆத்திரம் தணியாமல் தினேஷ்குமாரின் கார் கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தினார். இதனால் பயந்து போன தினேஷ்குமார் வீட்டு அறைக்குள் சென்று கதவை பூட்டிக்கொண்டார்.பிறகு இதுபற்றி நம்பியூர் போலீசுக்கு போனில் தகவல் கொடுத்தார். உடனடியாக சம்பவ இடத்திற்கு போலீசார் விரைந்து வந்தனர். கோபிநாத், தினேஷ்குமார், பிருந்தா உள்ளிட்டோரிடம் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

அ.தி.மு.க. நிர்வாகி குடும்ப பிரச்சினையில் துப்பாக்கியால் 3 முறை வானை நோக்கி சுட்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# சேலத்தில் பொங்கல் விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஏ.கே.எஸ்.எம் பாலு பரிசு வழங்கினர்!

சேலம், ஜன.20

சேலம் அஸ்தம்பட்டி அய்யன்திருமாளிகை பகுதியில் நடைபெற்ற பொங்கல் விழா விளையாட்டுப் போட்டிகளான கோல போட்டி, சட்டி உடைத்தல், மியூசிக்கல் சேர், கயிறு இழுத்தல், கிரிக்கெட் போட்டி, பலூன் உடைத்தல், லெமன் வித் ஸ்பூன், உள்ளிட்ட போட்டிகளில், வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சிநடைபெற்றது. இந்தநிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராககலந்து கொண்ட சேலம் மாநகர் மாவட்ட அதிமுக செயலாளர் ஏகேஎஸ்எம் பாலு, போட்டியில் வெற்றி பெற்ற நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டு தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் அஸ்தம்பட்டி பகுதி ஒன்றின் செயலாளர் குமார், ஏழாவது கோட்ட அதிமுக செயலாளர் ராஜ்கமல், மாநில எம்ஜிஆர் மன்ற இணைச்செயலாளர் சரவணன், அஸ்தம்பட்டி பகுதி தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் லோகேஷ், உள்ளிட்ட ஏராளமான அதிமுகவினர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



# அப்துல் கலாம் சமத்துவ பொங்கல்!

தாராபுரம், ஜன.20

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாம் அறக்கட்டளையின் சார்பாக சமத்துவ பொங்கல் வைக்கப்பட்டது இதில் அறக்கட்டளை தலைவர் சையது அபுதாபிர் தலைமையில் நடைபெற்றது செயலாளர் சண்முகம் வரவேற்பு உரையாற்றினார் சமூக ஆர்வலர் டாக்டர் ஜெய்லானி, செயல் தலைவர் டாக்டர் சிவசங்கர், சமூக செயல்பாட்டாளர் ஜாபர் தமிழ் புலிகள் மாநில செயற்குழு உறுப்பினர் ஒண்டிவீரன், சிபிஐ தாலுகா செயலாளர் கனகராஜ் சமூக ஆர்வலர் நாத்திக சிதம்பரம் விடுதலைச் சிறுத்தை ரகு பங்கு மகேஷ் சாகுல், ஹமீது, நாட்டுதுறை, கண்ணன், முத்தரசு, முத்தலிப்பு, அரசு மருத்துவர் புனிதா விஜயகுமார், காங்கிரஸ் அக்கிம்அமீர் மற்றும் முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்ட கூடலூர் நாடுகானி பொன்வயல் பகுதியைச் சேர்ந்த கவிராஜ் வெற்றிவேல்மாநிலஅளவிலானசிலம்பம்போட்டியில்முதலிடம்பிடித்து நமது மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளார் வீர சொழி சிலம்பம் பொன்மலை பொன்னூர் பொன்வயல் விளையாட்டு குழு சார்பாகவும் பொதுமக்கள் சார்பாகவும் பாராட்டு விழா நடைபெற்றது.



# வாணியம்பாடியில் எம்.ஜி.ஆர் பிறந்த நாள் விழா கொண்டாட்டம்!

வாணியம்பாடி, ஜன.20

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி அதிமுக சார்பில் முன்னாள் முதல் அமைச்சர் எம்ஜிஆரின் 109 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு வாணியம்பாடி பேருந்து நிலையம், மாவட்ட அதிமுக அலுவலகம், சி.எல். சாலை, ஆசிரியர் நகர், காமராஜபுரம் மற்றும் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆலங்காயம், உதயேந்திரம், வள்ளிப்பட்டு, பெத்தவேப்பம்பட்டு, தும்பேரி, அம்பலூர், திம்மாம்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் எம்ஜிஆர் சிலை மற்றும் உருவ படங்களுக்கு முன்னாள் அமைச்சர் கே.சி வீரமணி, சட்டமன்ற உறுப்பினர் கோ.செந்தில்குமார் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து கொடி ஏற்றி வைத்து பொதுமக்கள் 2000 நபர்களுக்கு அன்னதானம் , இலவசவேட்டி, சேலை மற்றும் இனிப்புகள் வழங்கினர்.

தொடர்ந்து பெத்தவேப்பம்பட்டு பகுதியில் விளையாட்டு போட்டிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிகளில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோவி. சம்பத்குமார், வாணியம்பாடி நகர கழக செயலாளர் சதாசிவம், நாட்டறம்பள்ளி ஒன்றிய செயலாளர் சாம்ராஜ், பேரூர் செயலாளர்கள்சரவணன், சிவக்குமார், மாவட்ட மகளிரணி செயலாளர் மஞ்சுளாகந்தன், மருத்துவர் பசுபதி, மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞரணி செயலாளர் நவீன்குமார், மாவட்ட ஜெயலலிதா பேரவை இணைச் செயலாளர்சங்கர், முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் கோபால், ஒன்றியக்குழு உறுப்பினர் ச.பிரபாகரன், பாரதிதாசன், கோவிந்தசாமி, குமார்உள்ளிட்டநிர்வாகிகள், தொண்டர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## கோவையில்

# தெருவில் சென்ற சிறுவனை நாய் கடித்ததால் பெண் மீது வழக்கு

கோவை, ஜன.20

கோவை குனியமுத்தூர் அருகே உள்ள இடையர்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் அகமது (41). அதே பகுதியை சேர்ந்தவர் சாந்தா (40). அவர் தான் வீட்டில் வளர்ந்து வரும் நாயை அடிக்கடி தெருவில் விட்டு வந்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் அகமதுவின் மூத்த மகன் வெளியில் சென்றுவிட்டு வீட்டிற்கு திரும்பி கொண்டு இருந்தார். அப்போது அந்த நாய் சிறுவனை துரத்தி அவரது வலது காலில் கடித்தது. வலியால் துடித்த அவர் சத்தம் போட்டார்.

அவரின் சத்தத்தை கேட்டு வெளியில் வந்த அகமது மற்றும் குடும்பத்தினர் சிறுவனை மீட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர்.

இதை தொடர்ந்து அகமது, சாந்தாவிடம் சம்பவத்தை கூறி நாயை கட்டி வைத்து வளர்க்குமாறு தெரிவித்துள்ளார்.

ஆனால் சாந்தா அதை கண்டு கொள்ளாமல் அகமதை தகாத வார்த்தைகளால் திட்டி உள்ளார்.

இதுகுறித்து அகமது குனியமுத்தூர் போலீசில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



எம்.ஜி.ஆரின் 109–வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் மற்றும் கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.ஜி.அருண்குமார், மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.கே.செல்வராஜ் ஆகியோர் இணைந்து முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா உருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தனர்.



பொங்கல் விடுமுறையை முன்னிட்டு பவானிசாகா் அணைப் பூங்காவில் ஆயிரக்கணக்கானசுற்றுலாபயணிகள்படகில்பயணித்தும், ஊஞ்சல்ஆடியும்மகிழ்ந்தனா்.

## சிராவயல் மஞ்சுவிரட்டு:

# வாகனம் மோதி 2 காளைகள் சாவு; மாடுமுட்டியதில் 123 பேர் காயம்!

திருப்பத்தூர், ஜன. 20

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே சிராவயலில் மஞ்சுவிரட்டு நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி மஞ்சுவிரட்டு வீரர்களுக்கு கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மாடுகளைப் பிடித்த வீரர்களுக்கும் வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர்களுக்கும் தங்ககாசு, வெள்ளிக்காசு, அண்டா, மிக்ஸி, குக்கர், கிரைண்டர், பிளாஸ்டிக் சேர் உள்ளிட்ட பொருள்கள் பரிசாக வழங்கபட்டது. முன்னதாக காலை 10 மணியிலிருந்து சிராவயல் பொட்டலில் கட்டுமாடுகளாக சுமார் 300 காளைகள் அவி ழ்த்துவிடப்பட்டது. இதனை மாடுபிடி வீரர்கள் ஆர்வமாகப் பிடித்து மகிழ்ந்தனர். இதில் மாடு முட்டியில் 123 பேர் காயமடைந்தனர். சிராவயல் மரு்த்துவ முகாமில் முதலுதவி சிகிச்சைபெற்று சிவகங்கை, காரைக்குடி, திருப்பத்தூர் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதில் திருப்பத்தூர் மருத்துவமனையிலிருந்து சொக்கநாதபுரத்தைச் சேர்ந்த சசிக்குமார்(32) அழகமாநேரியைச் சேர்ந்த அமல நாதன்(52) நாகப்பன்பட்டியைச் சேர்ந்த முத்து ப்பழனி(40) சிவகங்கை சசிக்குமார்(20) மேலப்பூங்குடி ஆதிநாராயணன் ஆகிய 5 பேரும் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். கடியாபட்டியைச் சேர்ந்த அகஸ்டின்(18) என்பவர் திருமயம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.



இதில் மஞ்சுவிரட்டு பொட்டலில் இலகுரக வாகனத்தில் மோதி இரண்டு காளைகள் உயிரிழந்தது சோகத்தை ஏற்படுத்தியது. சீறிப்பாய்ந்து சென்ற இரணசிங்கபுரத்தை சேர்ந்த பிரகாஷ் என்பவரது காளை பொட்டலில் நின்ற டாடா ஏசியின் மீது மோதி சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தது. இதேபோன்று மற்றொரு காளை டாடா ஏசி வாகனத்தின் மீது மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது.



கோவை நரசிம்மநாயக்கன்பாளையம் பஸ் நிலையம் அருகே நகர அ.தி.மு.க. சார்பில் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் பிறந்த நாளை முன்னிட்டு அவரது படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அன்னதானம் வழங்கப்பட்டது.இதில் ஒன்றிய செயலாளர் கே.வி.என். ஜெயராமன், ஒன்றிய அவைத் தலைவர் பி.ஏ.வேலுசாமி,நகர செயலாளர் எம். ஆனந்தன் ஜெயலலிதா பேரவை செயலாளர் சிவக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்






# மாட்டு பொங்கல் விழா!

கோவை, ஜன.20

கோவையில் பொன்மாலை பொழுது நண்பர்கள் குழுவை சார்ந்த இளைஞர்கள் பட்டாளம் ஒன்றிணைந்து, அக்குழுவின் தலைவர் ஜாஃபர் தலைமையில் மாட்டு பொங்கல் கொண்டாடினர். ஜல்லிக்கட்டு காளைகளுக்கு பொங்கலிட்டு, மாட்டு பொங்கல் பண்டிகை கொண்டாடினர். இந்த நிலையில், மாட்டு பொங்கலை முன்னிட்டு, ஜல்லிக்கட்டு காளைகளை குளிப்பாட்டி, சந்தன பொட்டு அலங்காரம் செய்து, பூமாலை மற்றும் கழுத்து மணி சலங்கை அணிவித்து, கரும்பு பந்தலில் தென்னங்குருத்து தோரணையுடன் புதுப்பானையில் பொங்கலிட்டனர். பானையில் பொங்கல் பொங்கி வரும் வேளையில், பொங்கலோ பொங்கல் என ஆரவாரம் செய்து பொங்கல் வாழ்த்துகளை பரிமாறினர். ஜோடிக்கப்பட்ட காளைகளை ஊர்வலமாக அழைத்து சென்றனர். இதில் பல்சமய நல்லுறவு இயக்கத்தின் தலைவரும், தமிழ்நாடு சிறுபாண்மை ஆணைய உறுப்பினருமான ஹாஜி. ஜெ. முகமது ரஃபி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

## ஈரோட்டில்

# சட்ட விரோத மது விற்பனை; ஒரே நாளில் 45 பேர் கைது!

ஈரோடு, ஜன.20

டாஸ்மாக் கடைக்கு விடுமுறை விடப்பட்ட தினத்தில், ஈரோடு மாவட்டத்தில் சட்டவிரோதமாக மது விற்பனை செய்ததாக ஒரே நாளில் 45 பேரை போலீஸார்கைது செய்து 881 மதுபுட்டிகளைபறிமுதல் செய்தனர்.

திருவள்ளுவர்தினத்தையொட்டி வெள்ளிக்கிழமை அனைத்து டாஸ்மாக் கடைகள் மற்றும் தனியார் பார்களுக்கு விடுமுறை விடப்பட்டிருந்தது. இதைப் பயன்படுத்தி மதுபுட்டிகளை பதுக்கிவைத்து சட்ட விரோதமாக விற்பனை செய்வோர் மீது நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி உத்தரவிட்டிருந்தார். அதன்பேரில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா தலைமையில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் சட்டம் ஒழுங்கு போலீஸார் தீவிர ரோந்து சென்றனர்.

இதில் வெள்ளிக்கிழமை ஒரே நாளில் சட்டவிரோதமாக மதுபுட்டிகளை பதுக்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்ததாக 45 பேரை போலீஸார் கைதுசெய்து அவர்களிடம் இருந்து 881 மதுபுட்டிகளை பறிமுதல் செய்தனர்.

# எளிதான ரைட். எளிதான வைப். இதோ புத்தம் புதிய Chetak C25!

சென்னை, ஜன.20

பஜாஜ் ஆட்டோ லிமிடெட், தனது Chetak வரிசையில் புதிய Chetak C25 மின்சார ஸ்கூட்டரை அறிமுகப்படுத்தியுள்ளது. தனித்துவமான மெட்டல் உடலமைப்பு, நியோகிளாசிக் வடிவமைப்பு மற்றும் இளமைத் துடிப்பான தோற்றத்துடன், நகர்ப்புற அன்றாடப் பயணத்திற்காக இது கச்சிதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. 2.5 kWh பேட்டரியுடன், ஒரு முறை சார்ஜில் 113 கி.மீ. பயணத் தூரம், 55 கி.மீ./மணி உச்ச வேகம் மற்றும் 2.25 மணி நேரத்தில் 80% சார்ஜ் போன்ற செயல்திறனை வழங்குகிறது.



நடைமுறை வசதிகளை மேம்படுத்தும் வகையில், 25 லிட்டர் டிக்கி, ஹில் ஹோல்ட் அசிஸ்ட், கைடு மீ ஹோம், டிஸ்க் பிரேக்குகள் போன்ற பிரீமியம் அம்சங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. 6 துடிப்பான வண்ணங்களில் கிடைக்கும் C25, நெரிசலான நகரத் தெருக்களில் எளிதான கையாளுதலும் ஸ்டைலான பயண அனுபவமும் வழங்குகிறது. பிளாஸ்டிக் ஸ்கூட்டர்கள் நிறைந்த சந்தையில், Chetakஇன் உறுதி, நீடித்துழைப்பு மற்றும் நம்பகத்தன்மையை இது தொடர்கிறது.

₹91,399 (டெல்லி எக்ஸ்ஷோரூம்) விலையில், இந்தியா முழுவதும் உள்ள அனைத்து Chetak ஷோரூம்களிலும் Chetak C25 கிடைக்கிறது. இதுகுறித்து பஜாஜ் ஆட்டோலிமிடெட் நிறுவனத்தின் அர்பனைட் பிசினஸ் தலைவர் எரிக் வாஸ் கூறுகையில், C25 நகரப் பயண தேவைகளின் மாற்றத்தை பிரதிபலிப்பதாகவும், இளைய, சுறுசுறுப்பான பயன்பாட்டை நோக்கி Chetak போர்ட்ஃபோலியோவை விரிவுபடுத்துவதாகவும் தெரிவித்தார்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

# வீடு கட்டுமான பணியின்போது மண்ணுக்குள் புதைந்து 3 தொழிலாளர்கள் பலி!

## குன்னூர் அருகே பரிதாபம்!!



ஊட்டி,ஜன.20

வீடு கட்டுமான பணி யின்போது ஏற்பட்ட மண்சரிவில் 3 தொழிலா ளர்கள் பலியானார்கள். நீலகிரி மாவட்டத்தின் தனித்த சுற்றுச்சூழலை பாது காக்கவும், கட்டுமான பணி களை கட்டுப்படுத்தவும் பல் வேறு விதி முறைகள் வகுக்கப் பட்டுள்ளது. ஆனாலும் மாவட்டம் முழுவதும் விதிமு றைகளை மீறி கட்டிட பணி கள் நடக்கிறது. இதனால் உயி ரிழப்புகள் ஏற்பட்டு வருகிறது.

குன்னூர் அருகே ஜெகதளா பேரூராட்சி ஒத னட்டி கிரா மத்தைசேர்ந்தவர் முத்துகிருஷ் ணன். இவருக்கு சொந்தமான நிலத்தில் வீடு கட்டுவதற்காக அஸ்திவாரம் அமைக்கும் பணி கள் கடந்த சில நாட்களாக நடந்து வந் தன. முத்துகிருஷ் ணின் நிலம் பள்ளமான பகுதி யில் இருந்ததால் 40 அடிக்கு தடுப்புச்சுவர் கட்ட மண் தோண்டும் பணி நடந்தது. இந்த பணியில் மேற்குவங்கமாநிலம் முசிரா பாத் பகுதியை சேர்ந்த கபில் ஷேக்(வயது 35), அப்துல் ரகுமான் (29), நகுபுல் ஹகியூ(33) உட்பட 5 தொழிலா ளர்கள் ஈடுபட்டு வந்த னர். இந்தநிலையில் நேற்றும் வழக்கம்போல் காலையில் அவர்கள் பணியில் ஈடுபட்ட னர். தொடர்ந்து மதியம் சாப் பிட்ட பிறகு பணி களை மேற் கொண்டனர். அப்போது திடீரென 40 அடி உயரத்தில் இருந்து மண் சரிந்து தொழி லாளர்கள் கபில் ஷேக், அப் துல் ரகுமான், நகுபுல் ஹகியூ ஆகிய 3 பேர் மீதும் விழுந்தது. இதனால் அவர்கள் மண்ணுக் குள் உயிரோடு புதைந்து உயி ருக்கு போராடினர். மற்ற 2 பேர் தப்பியோடி உயிர் தப்பி னர்.

இதைபார்த்து அதிர்ச்சி அடைந்த அங்கிருந்தவர்கள் மண்ணுக்குள் புதைந்த 3 பேரையும் மீட்க முயன்றனர். தகவல் அறிந்த வருவாய்த்து றையினர், தீயணைப்பு துறையினர், ராணுவத்தினர் ஆகி யோரும் விரைந்து வந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.

இதில் ஒருவர் உயிர் ஊச லாடிய நிலையில் மீட்கப் பட்டு ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக குன்னூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் செல்லும் வழியி லேயே அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

மற்ற 2பேரை மீட்கும் பணி களை மேற்கொள்ள சிரமம் ஏற்பட்டதால் பொக்லைன் எந்திரம் வரவழைக்கப்பட்டு மண் அகற்றும் பணி நடை பெற்றது.

இதன்படி ஒரு மணி நேரமான நிலையில் ஒருவ ரின் கை மட்டும் தனியாக கிடைத்தது. பின்பு அடுத்த டுத்து மண்ணை தோண்டி அகற்றியபோது மற்ற 2பேரும் உயிரிழந்த நிலையில் உடல் கள் கைப்பற்றப்பட்டன. இந்த சம்பவம் பெரும் பரபரப்பை யும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.



# ஆனைமலை மாசாணியம்மன் கோவில் குண்டம் திருவிழா!

## கொடியேற்றத்துடன் தொடங்கியது!!

ஆனைமலை ஜன.20

கோவை மாவட்டம் ஆனைமலையில் பிரசித்தி பெற்ற மாசாணியம்மன் கோவிலில், ஆண்டுதோறும் நடைபெறும் குண்டம் திருவிழா வெகு விமர்சியாக நடைபெறும், இந்த வகையில் இந்த ஆண்டு பக்தர்கள் குண்டம் இறங்கும் திருவிழா வரும் பிப்ரவரி 3ஆம் தேதி நடைபெற உள்ளது.

இதனை முன்னிட்டு, தை அமாவாசை தினமான இன்று கொடியேற்றத்துடன் விழா கோலாகலமாக துவங்கியது. திருவிழாவிற்காக சர்க்கார்பதி பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்ட 80 அடி உயரமுள்ள கொடி மரம், உப்பாற்றங்கரையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டன. தொடர்ந்து, ஆனைமலையின் முக்கிய வீதிகள் வழியாக பக்தர்கள் தோளில் சுமந்து கொடிமரம் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டது. கோவிலின் ராஜ கோபுரம் முன்புற வளாகத்தில் மங்கள வாத்தியங்கள் முழங்க, சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு, சிம்ம வாகனம் பொறித்த மஞ்சள் நிற கொடியுடன் கொடிமரம் ஏற்றப்பட்டது.

இதில் பங்கேற்ற ஆயிரக்கணக்கான பக்தர்கள், “மாசாணி தாயே, மாசாணி தாயே” என பக்தி கோஷங்களை எழுப்பி தரிசனம் செய்தனர்.

தொடர்ந்து, மாசாணியம்மனுக்கு சிறப்பு பூஜைகளும், கொடி மரத்திற்கு பாலாபிஷேக பூஜைகளும் நடைபெற்றன.

திருவிழாவின் ஒரு பகுதியாக, வரும் 31ஆம் தேதி இரவு 12.30 மணிக்கு மயான பூஜையும், பிப்ரவரி 1ஆம் தேதி காலை 7.30 மணிக்கு சக்தி கும்பஸ்தாபனமும், மாலை 6.30 மணிக்கு மகா பூஜையும் நடைபெற உள்ளது.

இதனைத் தொடர்ந்து, பிப்ரவரி 2ஆம் தேதி இரவு குண்டம் பூ வளர்க்கப்பட்டு, முக்கிய நிகழ்ச்சியான பக்தர்கள் குண்டம் இறங்கும் நிகழ்ச்சி பிப்ரவரி 3ஆம் தேதி காலை 7 மணியளவில் நடைபெற உள்ளது என்பது குறிப்பி டத்தக்கதாகும்



கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டையை அடுத்த அணுசோனை கிராமத்தை சேர்ந்தவரும், கட்சிக்காக உயிர்தியாகம் செய்தவருமான இந்திய கம்யூனிஸ்டு கட்சி பிரமுகர் ஆதித்யவர்தன் நினைவுநாள் கூட்டம் நடந்தது. இதில் அவரது சமாதிக்கு மலர் மாலை மற்றும் பூக்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

## மேட்டூர் அருகே

# எருது விடும் விழாவில் காளை முட்டி விவசாயி சாவு!

மேச்சேரி, ஜன:20

மேட்டூர் அருகே புக்கம்பட்டி கிராமத்தில் இன்று நடைபெற்ற எருது ஆட்டத்தை வேடிக்கை பார்த்த விவசாயி ராஜ்குமார் 58, என்பவரை காளைமாடு முட்டியதில் பரிதாபமாக உயிரிழந்தார்.

சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே புக்கம்பட்டி கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோவிலில் நடைபெற்ற எருது விடும் ஆட்டத்தில் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த சுமார் 50க்கும் மேற்பட்ட காளைமாடுகள் அழைத்துவரப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட மாடுபிடி இளைஞர்களும், சுமார் 2,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வேடிக்கை பார்ப்பதற்காக வந்திருந்தனர்.



இந்த நிலையில் காளைகளை கயிற்றால் கட்டி கோவிலை சுற்றி அழைத்து வந்தனர். அப்பொழுது கூட்டம் அதிகமாக இருந்ததால் அச்சமடைந்த காளைகள் இளைஞர்களை பந்தாடி விட்டு கூட்டத்தை நோக்கி பாய்ந்தது. அப்பொழுது எதிரே இருந்த பார்வையாளர்கள் கூட்டத்திற்குள் புகுந்த காளை வேடிக்கை பார்க்க வந்த விவசாயி ராஜ்குமார் 58 என்பவரை முட்டியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதனைத் தொடர்ந்து காயம் அடைந்த மேலும் இருவர் சேலத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# பஸ் பயணியை நடுவழியில் இறக்கி விட்டதாக புகார்!

## விசாரணை நடத்த கோவை கலெக்டர் உத்தரவு!!

கோவை,ஜன.20

கோவை வடவள்ளி பகுதியைச் சேர்ந்த 40 வயது பயணி ஒருவர், அரசு பஸ்சில் பயணம் செய்தார், அந்த பஸ் ஆர்.எஸ்.புரம் நோக்கி சென்று கொண்டிருந்த போது,அந்த பயணிக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

சிறிது நேரத்தில் அவர் மயக்கமடைந்து பஸ்சுக்குள் விழுந்துள்ளார், இதை அறிந்த பஸ் கண்டக்டரும், டிரைவரும் அந்த பயணியை ஆர்,எஸ்,புரத்தில் சாலையோரமாக படுக்க வைத்து விட்டு பஸ்சை தொடர்ந்து இயக்கிச் சென்றதாக கூறப்படுகிறது.

அதை பார்த்த பொது மக்கள் 108 ஆம்புலன்சுக்கு தகவல் தெரிவித்தனர், உடனே சம்பவ இடத்திற்கு வந்த ஆம்புலன்ஸ் மூலம் மயக்க நிலையில் இருந்த அந்த பயணி அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்தசம்பவம் மாவட்ட கலெக்டர் பவன்குமாரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது அவர் அரசு பஸ் கண்டக்டர், மற்றும் டிரைவரிடம் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க போக்குவரத்து கழக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இது குறித்து அரசு பஸ் போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறும் போது, அந்த பயணி அடிபோதையில் இருந்தால பஸ்சில் இருந்து இறக்கிவிட்டதாக கண்டக்டர் சரவணன் தெரிவித்துள்ளார்,

அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது, மேலும் பஸ் டிரைவரும் அலட்சிய போக்குடன் நடந்து கொண்டாரா என்று விசாரணை நடைபெறுகிறது விசாரணையின் முடிவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும், என்றனர்.



சத்தியமங்கலம் அரியப்பம்பாளையம் நேரு நகரில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி பங்கேற்றார்.

# குளத்தில் மிதந்த ஆண் உடல் மீட்பு!

கோபி, ஜன. 20

கோபி அருகே பிச்சாண்டா ம்பாளையம் குளத்தில், 60 வயது மதிக்கத்தக்க ஆண் உடல் தண்ணீரில் மூழ்கி நிலையில் கிடப்பதாக, போலீ சாருக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில் கோபி போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று, உடலை மீட்டு கோபி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். முதல்கட்ட விசாரணையில், குளத்தில் இறந்து கிடந்தவர் கோபி அருகே கூகலுாரை சேர்ந்த, கோபால் (56), எனவும், அவர் கூலித்தொழிலாளி என தெரியவந்தது. கோபால் இறப்புக்கானகாரணம் குறித்து, கோபி போலீசார் விசா ரிக்கின்றனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் அசோக்குமார்எம்.எல்.ஏ.தலைமையில்எம்.ஜி.ஆர்.பிறந்தநாள்விழாகொண்டாடப்பட்டது.



காணும் பொங்கல் விழாவை முன்னிட்டு பவானி காவிரிஆற்றில் குவிந்த பொதுமக்கள் நீராடி மகிழ்ந்தனர்.

# குடியிருப்புக்குள் புகுந்து தகர ஷெட்டுகளை சேதப்படுத்திய யானை!

சத்தியமங்கலம்,ஜன.20

கடம்பூரை அடுத்த பவளக்குட்டை மலைக் கிராமத்தில் புகுந்த காட்டு யானை, அங்கு மக்கள் வசிக்கும் குடியிருப்புக்குள் புகுந்து தகர ஷெட்டுகளை சேதப்படுத்தியதால் மக்கள் அச்சமடைந்தனர்.

சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், கடம்பூர் மலைப் பகுதியை ஒட்டியுள்ள பவளக்குட்டை கிராமத்தில் கடந்த சில தினங்களாக ஒற்றை யானை நடமாட்டத்தால் மக்கள் விவசாயப் பணிகளுக்குச் செல்ல முடியாமல் முடங்கியு ள்ளனர். இந்த நிலையில் பவளக்குட்டை அரசு நடுநிலைப் பள்ளிக்கு சனிக்கிழமை அதிகாலை வந்த யானை, அங்கும் இங்கும் உலவியது. அதைத் தொடர்ந்து ஊருக்குள் புகுந்த யானை, பிளிறியபடி மக்கள் வசிக்கும் குடியிருப்புக்குள் நுழைந்தது.



இதனால் விழித்துக்கொண்ட மக்கள், யானை நடமாட்டத்தைக் கண்காணித்தனர். தெருக்கள் வழியாக யானை வருவதைக் கண்டு வீட்டுக்குள் சென்றனர். ஆக்ரோஷமாக வந்த யானை, வழித்தடத்தில் இருந்த தகர ஷெட்டை பெயர்த்து வீசியெறிந்தது.

கிராம மக்கள் வீட்டின் மேற்கூரையில் நின்று சப்தம் போட்டு யானையை விரட்டினர். சுமார் 2 மணி நேர போராட்டத்துக்குப் பின் யானை தானாகவே வனத்துக்குள் சென்றது.

ஊருக்குள் புகும் யானையை அடர்ந்த வனப் பகுதிக்குள் விரட்ட வனத் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர்.



நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் த.வெ.க. சார்பில் விஜய் இலவச ஆம்புலன்ஸ் சேவை கிழக்கு மாவட்ட செயலாளர் ராசி .ஜெ.ஜெ. செந்தில்நாதன் முன்னிலையில் தொடங்கி வைக்கப்பட்டது.

# பெண்ணை தாக்கிய கட்டிட தொழிலாளி கைது!

கிருஷ்ணகிரி,ஜன.20

கிருஷ்ணகிரி பானாக்கார தெருவை சேர்ந்தவர் அலமேலு (வயது 48). வளையல் வியாபாரம் செய்து வருகிறார்.

இவரது அண்ணன் மாதையன் மகன் பிரபாகரன் (22). கட்டிட தொழிலாளி. கடந்த, 10 ஆண்டுகளுக்கு முன் அலமேலுவிடம், 3 பவுன் சங்கிலி வாங்கி சென்றார். அதை மீண்டும் கொடுக்கவில்லை. இதுகுறித்து கடந்த 15ந் தேதி அலமேலு கேட்டபோது, ஆத்திரமடைந்த அவர், அலமேலுவை கல்லால் தாக்கி மிரட்டி சென்றார்.

காயமடைந்த அலமேலு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அவர் கொடுத்த புகாரின் பேரில் கிருஷ்ணகிரி டவுன் போலீசார் வழக்குப்பதிவு செய்து பிரபாகரனை கைது செய்தனர்.

# மாடு முட்டியதில் குடல் சரிந்து காவலாளி பலி!

கிருஷ்ணகிரி, ஜன.20

காவேரிப்பட்டணம் அருகே பொங்கல் பண்டிகையையொட்டி மாடுகளை விடும் நிகழ்ச்சியில் மாடு முட்டி தனியார் நிறுவன காவலாளி பலியானார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் அடுத்த சவுளூரில் காணும் பொங்கல் விழா நடந்தது. இதன் முக்கிய நிகழ்வாக அப்பகுதி மாரியம்மன் கோவில் அருகே உள்ள பகுதியில் மாடுகளை விடும் விழா நடந்தது. இதில், ஊர்மக்கள் மாடுகளை ஓட விட்டு இளைஞர்கள் துரத்தி பிடிப்பார்கள்.

இந்த நிலையில் நேற்று மதியம் மாடு விடும் விழாவில் ஒரு மாடு துள்ளிக்குதித்து ஓடியது. அப்போது, மூலிக்கால் சவுளூரை சேர்ந்த தனியார் நிறுவன ஊழியர் இளவரசன் (39) என்பவர் அங்கு நின்று கொண்டிருந்தார். அவரை மாடு ஒன்று முட்டி சென்றது. இதில் அவர் குடல் சரிந்து சம்பவ இடத்திலேயே பலியானார்.

இது குறித்து தகவல் அறிந்ததும் காவேரிப்பட்டணம் போலீசார் அங்கு சென்று உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக காவேரிப் பட்டணம் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# ஈரோடு மாவட்டம் வெள்ளோட்டில் புதுப்பிக்கப்பட்ட காளிங்கராயர் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்!

ஈரோடு,ஜன.20

பவானி ஆற்றிலிருந்து பாசனத்திற்காக 743 ஆண்டுகளுக்கு முன்பு காளிங்கராயன் கால்வாயை வெட்டிய காளிங்கராயரின் நினைவைப் போற்றும் வகையில் இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. காளிங்கராயன் பாளையத்தில் தொடங்கி அக்ரகாரம், ஈரோடு, மொடக்குறிச்சி, கணபதி பாளையம், பாசூர், கருமண்டம்பாளையம், ஊஞ்சலூர், வெங்கம்பூர் வழியாக காவிரி ஆற்றில் கலக்கும் இக்கால்வாய் மூலம் சுமார் 25,000 ஏக்கர் பரப்பளவில் மஞ்சள், கரும்பு, வாழை, நெல் எனப் பல பயிர்கள் செழித்து வருகின்றன.




வெள்ளோட்டில் நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகளுக்காக அகற்றப்பட்ட இச்சிலை, தற்போது ராசா கோயில் அருகே புதுப்பிக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. இன்றைய திறப்பு விழாவில், தமிழக வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு துறை அமைச்சர் முத்துசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈஸ்வரன், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், திமுக நிர்வாகிகள் மற்றும் காளிங்கராயன் வாரிசுதாரர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



## ஈரோடு நேதாஜி சந்தையில்
# 13-வது மாதம் தை அமாவாசையன்று 1600 க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம்!

ஈரோடு,ஜன.20

ஈரோடு தாளவாடி தலைமலை தொட்டபுரம் ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சேவா அறக்கட்டளை மற்றும் ஈரோடு தினசரி காய்கறி சந்தை நண்பர்கள் இணைந்து, 2026ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் தங்களது சேவையைத் தொடர்ந்துள்ளனர். தை அமாவாசையை முன்னிட்டு, ஈரோடு நேதாஜி காய்கறி சந்தையில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, 13வது மாதமாகச் சிறப்பு அன்னதானம் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு மணியன் மில் ஸ்டோர் உரிமையாளர் பாலாஜி முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளர்களாக பவர் கனெக்ட் உரிமையாளர் பாலாஜி, சண்முகம், முன்னாள் மாமன்ற உறுப்பினர் அன்பழகன் மற்றும் கமிட்டியின் மகளிர் அணியினர் கலந்துகொண்டு 1000க்கும் மேற்பட்டோருக்கு உணவை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து, கொங்கலம்மன் கோவில் வீதியிலும் சுமார் 600 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்வின் இறுதியில், அறக்கட்டளை நிர்வாகிகள் வந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.



# புதுக்கோட்டை அருகே ஆலங்குடி தொகுதிக்கு விசிக சார்பில் மாவட்ட புதிய நிர்வாக பொறுப்பாளர் அறிமுக விழா!

புதுக்கோட்டை,ஜன.20

தமிழக விடுதலை சிறுத்தைகள் கட்சியின்தலைவர் தொல்திரு மாவளவன் அறிவுறுத்தலின்படி புதிதாக புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதிக்கு மாவட்ட செயலாளர் மற்றும் புதிய நிர்வாக பொறுப்பாளர் அறிமுக விழா சந்தை ப்பேட்டையில் உள் ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

அறிமுக விழா கூட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட ஆ லங்குடி சட்டமன்ற தொகுதியின் மாவட்ட செயலாளர் அம்பேத்கலவன் தலைமையில் நடைபெற்றது. விழாவில் ஆலங்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட விசிகவின் அனைத்து பொறுப்பாளர்களும் ஆலங்குடி காமராஜர் சிலை அருகி ல் திறன்டனர்.அங்கு வந்த புதி தாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலங்குடி சட்டமன்ற தொகுதி க்கு உட்பட்ட விசிகவின் மாவட்ட செயலாளர் அம்பேத்வ ளவன் தனது பொறுப்பாளர்களுடன் காமராஜர் சிலைக் கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

பின்னர் அங்கிருந்து மேள தாளங்கள் முழங்க வான வெடிகள் அதி ர ஊர்வலமாக பழைய நீதிமன்ற வளாகம் மற்றும் அரசமரம் பஸ் ஸ்டாப்,வடகாடு முக்கம், பாத்தம்ப ட்டி முக்கம் சந்தைப்பேட்டை உள் ளிட்ட வழியாக தனியா ர் மண்டப முன்பு வைக்கப்பட்டுள்ள டாக்டர் அம்பேத்கர் பதாகைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து ஆ தரவாளர்களுடன் கோஷங்களை எழுப்பி விழா அரங்கி ற்கு ஊர்வ லமாக சென்றனர்.

இதையடுத்து விழா அரங்கில் ஆலங்குடி சட்டமன்ற தொகுதிக்கு ட்பட்ட மாவட்ட செயலாளர் மற்றும் அனை த்து நிர்வாக பொறுப்பா ளர்கள் அறிமுகம் விழா நடை பெற்றது.

இதையடுத்து மாவட்ட செயலாளர் அம்பேத் வளவனுக் கு மாலை மற்றும் பொன்னாடை அணிவித்து வாழ்த்து ரை வாழ்த்தினார்கள். விழாவில் மற்ற தொகுதி மாவட்ட செயலாளர்கள்,வெளி மாவட்ட செயலாளர்கள், பொறுப் பாளர்கள் மற்றும் மாவட்ட பொருளாளர்,மாவட்ட செய்தி பிரிவு மாவட்ட துணைச் செயலாளர்கள் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், மற்றும் மாநில மண்டல மாவட்ட ஒன்றிய நகர பேரூர் முகாம் நிர்வாகிகள் துணைநிலை அமைப்பின் பொறுப்பாளர்கள் மற்றும் அரசு ஊழியர் ஐ க்கிய பேரவை மற்றும் மற்ற கட்சி நிர்வாகிகள் பெண்க ள் உட்பட திரளானோர் விழாவில் கலந்து கொண்டனர். ஆலங்குடி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடு பட்டிருந் தனர்.விழாவில் அனைவருக்கும் மதிய உணவு வழங்க ப்பட்டது.

## ஆலங்குளம் அருகே
# மதப்போதகர் தூக்கிட்டு சாவு!

நெல்லை, ஜன.20

ஆலங்குளம் அருகே மதப் போதகர் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். அவர் மனநல பாதிப்பால் இந்த விபரீத முடிவை தேடிக் கொண்டதாக கூறப்படுகிறது.

நெல்லை சந்திப்பு மேகலிங்கபுரம் உச்சிமகாளி அம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் ரவீந்திரன் மகன் ராஜேஷ் குமார் (38). இவர் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய நிலையில் ஊர் ஊராக சென்று மதப் போதகம் செய்து வந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று காலை தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே உள்ள அடைக்கலப்பட்டணத்திற்கு சென்றுள்ளார். அப்போது அங்குள்ள ஒரு தங்குமிடுதியில் இருக்கும் சுவிசங்கர் என்பவரை பார்ப்பதற்காக அவரது அறைக்கு சென்றுள்ளார். இதையடுத்து சுவி சங்கர் ஊருக்கு செல்வதாகவும், அவரது அறையில் ராஜேஷ்கு மாரை தங்கி இருக்குமாறு கூறியுள்ளார். இதன் பின்னர் இரவு வெகு நேரம் ஆகியும் ராஜேஷ் குமார் அரைக்கதவு திறக்கவில்லை. இதில் சந்தேகம் அடைந்த விடுதி உரிமையாளர் ஆலங்குளம் போலீசாருக்கு தகவல் தெரிவித்துள்ளார். தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று கதவை உடைத்து உள்ளே சென்றனர். அங்கு பேன் கொக்கியில் ராஜேஷ் குமார் தூக்கு போட்டு பிணமாக தொங்கினார். அவரது உடலை போலீசார் மீட்டு பிரேத பரிசோதனைக்காக பாளை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் சம்பவம் குறித்து போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். போலீசாரின் விசாரணையில் மனநல பாதிப்பில் ராஜேஷ் குமார் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இதன் காரணமாக அவர் தற்கொலை செய்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.



# வாணியம்பாடி அருகே பொங்கல் பண்டிகை முன்னிட்டு எருது விடும் திருவிழா!
## செந்தில்குமார் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்!!

வாணியம்பாடி, ஜன.20

திருப்பத்தூர்மாவட்டம்வாணியம்பாடி அடுத்த வெள்ளகுட்டை ஊராட்சியில் பொங்கல் பண்டிகை முன்னிட்டு எருது விடும் திருவிழா நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் கலந்து கண்டு விழாவை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதில் வேலூர், ஆம்பூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மற்றும் வெளி மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து சுமார் 200க்கும் மேற்பட்ட காளைகள் கலந்து கொண்டு சீறிப்பாய்ந்து ஓடியது. போட்டியில் குறைவான வினாடிகளில் இலக்கை அடையும் காளைகளுக்கு முதல் பரிசாக 1 லட்சத்து 22 ஆயிரம், இரண்டாம் பரிசு 1 லட்சத்து 11 ஆயிரம் மூன்றாம் பரிசு ஒரு லட்சத்து ஆயிரம் ரூபாய் என மொத்தம் 55 பரிசுகள் வழங்கப்பட்டது.

விழாவில் ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் பொதுமக்கள கலந்துகொண்டு கண்டு களித்தனர்.

அசம்பாவிதம் ஏற்படாமல் இருக்க வருவாய்த் துறையினர், 200க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

## பா.ம.க. சார்பில்
# இதுவரை 4,109 பேர் விருப்ப மனு தாக்கல்!
## ராமதாஸ் அறிவிப்பு!!



சென்னை, ஜன.20

சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ம.க. சார்பில் போட்டியிட இதுவரை 4,109 பேரிடம் இருந்து விருப்ப மனுக்கள் பெறப்பட்டுள்ளதாக அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார்.

திண்டிவனம் அடுத்த தைலாபுரத்தில் பா.ம.க. நிர்வாக குழுக்கூட்டம் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தலைமையில் நேற்று நடைபெற்றது. கவுரவத் தலைவர் ஜி.கே.மணி, செயல் தலைவர் ஸ்ரீகாந்தி, வன்னியர் சங்கத் தலைவர் பு.தா. அருள்மொழி உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்திற்குப் பின் ராமதாஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது: எனது தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கூட்டணி தொடர்பாக முக்கிய முடிவு எடுப்பது தொடர்பாக ஆலோசித்தோம். விரைவில் கூட்டணி குறித்து அறிவிக்கப்படும்.

வரலாறு காணாத வகையில் பாமகவினர் ஆர்வத்தோடு விருப்ப மனு அளித்தனர். இதுவரை 4,109 பேர் விருப்பமனு அளித்துள்ளனர். இது எங்களுக்கு பெரிய மகிழ்ச்சியை அளிக்கிறது என்றார்.

# ஜல்லிக்கட்டு போட்டியில் வெற்றி பெற்ற காளைக்கு கிராம மக்கள் உற்சாக வரவேற்பு!

சேலம்,ஜன.20

சேலம் மாவட்டம் நான்கு ரோடு அருகே உள்ள அரிசி பாளையம் பகுதியை சேர்ந்தவர் குட்டி. இவர் எட்டு வயது பூர்த்தி அடைந்த ஜல்லிக்கட்டு காளையை வளர்த்து வருகிறார்.



இந்நிலையில் நேற்று நாமக்கல் மாவட்டம் எருமைப்பட்டியில் நடைபெற்ற, ஜல்லிக்கட்டு போட்டியில் அவரது நரசிம்மா என்ற காளை, போட்டியில் கலந்து கொண்டு, தன்னைஅடக்க வந்த 50 மாடு பிடி வீரர்களையும் தெறிக்க விட்டு, யாரும் தன்னை நெருங்க முடியாதபடி, அனைவரையும் விரட்டி அடித்து, போட்டியில் இரண்டாம் பரிசை தட்டிச் சென்றது. இந்தப் பரிசில் பேட்டரி பொருத்திய இருசக்கர வாகனம் மற்றும் சைக்கிள், பேன், மிக்ஸி, கிரைண்டர், உள்ளிட்ட பரிசுகளை தட்டிச் சென்ற காலை நேற்று இரவு ஊருக்கு அழைத்து வரப்பட்ட போது, ஊர்மக்கள் ஒன்று திரண்டு, நரசிம்மா காளைக்கு ஆரத்தி எடுத்து, பட்டாசு வெடித்து, தங்களது ஊருக்கு பெருமை சேர்த்த காளையை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.



## சேலம் மத்திய சிறை வளாகத்தில்
# முனீஸ்வரன் கோவிலில் விளையாட்டு போட்டி!

சேலம்,ஜன.20

சேலம் மாவட்டம் அஸ்தம்பட்டி பகுதியில் உள்ள சேலம் மத்திய சிறை வளாகத்தில், உள்ள முனீஸ்வரன் திருக்கோவிலில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்று பொங்கல் திருவிழாவை முன்னிட்டு, நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று சிறை வளாக அரங்கத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கோவை சரக சிதைத்துறை டிஐஜி ஜெயபாரதி, போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டு தெரிவித்து கௌரவித்தார். மேலும் இது குறித்து பேசிய அவர், பொங்கல் விழா போட்டிகளில் மிக ஆர்வத்துடன் கலந்து கொண்ட சிறைத்துறை காவலர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் தனது பாராட்டை தெரிவிப்பதாக கூறினார்.

இதனைத் தொடர்ந்து பேசிய சிறைக் கண்காணிப்பாளர் வினோத், பொங்கல் திருவிழாவை முன்னிட்டு, கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு போட்டிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து சிறைத்துறையை சேர்ந்த எல்லாருக்கும், தனது நன்றியை தெரிவிப்பதாகவும், மேலும் அடுத்த வருடம் வரை தான் இங்கு பணியாற்றவில்லை என்றாலும், சிறைத்துறை அதிகாரிகள் மற்றும் சிறைத்துறை காவலர்கள் அனைவரும் இதே ஒற்றுமையுடனும், மகிழ்ச்சியுடனும், ஒன்றிணைந்து, இன்னும் எத்தனை வருடங்கள் ஆனாலும், போட்டிகளை நடத்தி அனைவரையும் மகிழ்விக்க செய்ய வேண்டும் என்றும், சேலம் மத்திய சிறை கண்காணிப்பாளராக தான் பணியாற்றி வருவது தனக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக, சிறை கண்காணிப்பாளர் வினோத் நெகழ்ச்சியுடன் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் சேலம் மத்திய சிறை அதிகாரிகள் ராஜேந்திரன், பிரபாகரன், உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட சிறைதுறையினர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## குளத்தூர் கிராமத்தில்
# சலூன் கடையில் தீ விபத்து!
## ரூ.1 லட்சம் பொருட்கள் சேதம்!!

கள்ளக்குறிச்சி, ஜன.19–

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் அருகே உள்ள குளத்தூர் கிராமம் விரியூர் சாலையோரத்தில், நடேசன் மகன் தனபால் சலூன் கடை நடத்தி வருகிறார். நேற்று அமாவாசை என்பதால் கடைக்கு



விடுமுறை விடப்பட்டு, சலூன் கடை மூடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நேற்று மாலை சுமார் 4.30 மணி அளவில், கடை அருகாமையில் குவிக்கப்பட்டிருந்த குப்பையில் திடீரென தீப்பற்றியது. அந்த தீ அருகில் இருந்த சலூன் கடைக்கு வேகமாக பரவி, கடை முழுவதும் தீப்பிடித்தது.

இதனை கவனித்த அக்கம் பக்கத்தினர் உடனடியாக சங்கராபுரம் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். தகவல் கிடைத்ததும் விரைந்து வந்த சங்கராபுரம் தீயணைப்பு துறையினர், தண்ணீரை பீச்சு அடித்து தீ மேலும் பரவாமல் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த தீ விபத்தில் சலூன் கடையில் இருந்த நாற்காலிகள், கண்ணாடிகள், மின் சாதனங்கள் உள்ளிட்ட அனைத்து உபகரணங்களும் முழுவதுமாக எரிந்து சேதம் அடைந்தன. இதனால் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு சுமார் ஒரு லட்சம் ரூபாய் இருக்கும் என கடையின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த தீ விபத்து தொடர்பாக சங்கராபுரம் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



சேலம் அஸ்தம்பட்டி அடுத்துள்ள அய்யன்திருமாளிகை பகுதியில் நேற்று நடைபெற்ற பொங்கல்விழாவிளையாட்டுப்போட்டிகளானகோலபோட்டி,சட்டிஉடைத்தல்,மியூசிக்கல் சேர், கயிறு இழுத்தல், கிரிக்கெட் போட்டி, பலூன் உடைத்தல், லெமன் வித் ஸ்பூன், உள்ளிட்டபோட்டிகளில்,வெற்றிபெற்றவர்களுக்குபரிசுவழங்கும்நிகழ்ச்சிநடைபெற்றது. இந்தநிகழ்ச்சியில்சிறப்புஅழைப்பாளராககலந்து கொண்டசேலம் மாநகர் மாவட்டஅதிமுக செயலாளர்ஏகேஎஸ்எம்பாலு,போட்டியில்வெற்றிபெற்றநூற்றுக்கும்மேற்பட்டவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டு தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் அஸ்தம்பட்டி பகுதி ஒன்றின் செயலாளர் குமார், ஏழாவது கோட்டை அதிமுக செயலாளர் ராஜ்கமல், மாநில எம்ஜிஆர் மன்ற இணைச்செயலாளர் சரவணன், அஸ்தம்பட்டி பகுதி தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் லோகேஷ், இணை செயலாளர் ராஜேந்திரன், உள்ளிட்ட ஏராளமான அதிமுகவினர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.